## *Govt High School, Samathuvapuram Hosur – Krishnagiri Dt*

***Name :***

## *VII STD - வரலாறு History*

### *அலகு - I இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்*

### *Unit - I Sources of Medieval India*

***I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்:***

***Choose the correct answer***

1. ____________ என்பவை பாறைகள், கற்கள், கோவில் சுவர்கள் , உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.

____________ are the writings engraved on solid surfaces such as rocks, stones, temple walls and metals.

காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் Chronicles

பயணக்குறிப்புகள் Travelogues

நாணயங்கள் Coins

பொறிப்புகள் Inscriptions

2. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ____________ ஆகும்.

_____________ was the land gifted to temples.

வேளாண்வகை Vellanvagai

சாலபோகம் Shalabhoga

பிரம்மதேயம் Brahmadeya

தேவதானம் Devadana

3. ____________ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.

_____________period was known as the period of devotional literature.

சோழர் Chola

பாண்டியர் Pandya

ராஜபுத்திரர் Rajput

விஜயநகர அரசர்கள் Vijayanagara

LIVEWORKSHEETS

4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ______________ ஆகும்.

_________ provides information about the first Sultan of Delhi.

அயினி அக்பரி Ain-i-Akbari

தாஜ் - உல் – மா -அசிர் Taj-ul-Ma'asir

தசுக்-இ-ஜாஹாங்கீரி Tuzk-i-Jahangiri

தாரிக் – இ – பெரிஷ்டா Tarikh-i-Frishta

5. அராபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் __________ ஆவார்.

_____________ , an Arab-born Morocco scholar, travelled from Morocco to India.

மார்க்கோபோலோ Marco Polo

அல் -பரூனி Al Beruni

டோமிங்கோ பயஸ் Domingo Paes

இபன் பதூதா Ibn Battuta

6. தேவாரத்தைத் தொகுத்தவர் ______________ Who composed Devaram?

நம்பியாண்டார் நம்பி Nambhiyandar Nambi

கம்பர் Kambar

சேக்கிழார் Sekkilar

ஜெயதேவா Jayadeva

7. திருவாலங்காடு செப்பேடுகளை வெளியிட்டவர் .................. Who issued the Tiruvalangadu plates?

ராஜராஜ சோழன் Rajaraja Chola

இராஜேந்திர சோழன் Rajendra Chola

குலோத்துங்கண் Kulothunga

விஜயாலயன் Vijalaya

LIVEWORKSHEETS

*8. உத்திர மேரூர் கல்வெட்டு அமைந்துள்ள மாவட்டம்*

At which district Uttiramerur inscriptions were founded ?

*மதுரை* Madurai

*சேலம்* Salem

*காஞ்சிபுரம்* Kanchipuram

*விருதுநகர்* Virudhunagar

*9. செப்பு நாணய முறையை அறிமுகப்படுத்தியவர்* Token curency was introduced by .. ...........

*முகமது - பின் - துக்ளக்* Mohammed - bin - Tuhlaq

*தாஜ் - உல் - மா - அசிர்* Taj - ud - Maassir

*தசுக் - இ - ஜஹாங்கீரி* Tuzki - Jahangiri

*தாரிக் - இ – பெரிஷ்டா* Tarih-i – Frishta

## *II. கோடிட்ட இடங்களை நிரப்புக:*

### *Fill in the Blanks*

*10. __________ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.*

___________ inscriptions provide details about administration in a Brahmadeya village.

*உத்திர மேரூர்* Uttiramerur

*முகமது கோரி* Muhammad Ghori

*ஜிட்டல்* Jital

*11. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் __________ ஆவார்.*

___________ had stamped the figure of Goddess Lakshmi on his gold coins and had his name inscribed on it.

*மின்கஜ் – உஸ் – சிராஜ்* Minhaj – US - Siraj

*நிக்கோலோ பாண்டி* Nicolo Conti

*முகமது கோரி* Muhammad Ghori

LIVEWORKSHEETS

12. ஒரு __________ என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.

3.6 grains of silver amounted to a__________.

மின்கஜ் – உஸ் – சிராஜ் Minhaj – US - Siraj

நிக்கோலோ பாண்டி Nicolo Conti

ஜிட்டல் Jital

13. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர்________ ஆவார்.

______________ was patronised by Sultan Nazir-ud-din Mahmud of Slave Dynasty.

மின்கஜ் – உஸ் – சிராஜ் Minhaj – US - Siraj

நிக்கோலோ பாண்டி Nicolo Conti

முகமது கோரி Muhammad Ghori

14. கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி _________ ஆவார்.

An Italian traveller _____________ visited Vijayanagar Empire in 1420.

நிக்கோலோ பாண்டி Nicolo Conti

முகமது கோரி Muhammad Ghori

ஜிட்டல் Jital

## III. பொருத்துக:

### Match the following

15. கஜுராகோ - ஒடிசா

Khajuraho - Odisha

16. கொனாரக் - ஹம்பி

Konark - Hampi

17. தில்வாரா - மத்தியப்பிரதேசம்

Dilwara - Madhya Pradesh

18. விருப்பாக்சா - ராஜஸ்தான

Virupaksha - Rajasthan

LIVEWORKSHEETS

*IV. சரியா? தவறா?*

***State true or false***

*19. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.*

Pallichchandam was the land donated to Jaina institution.

சரி True

தவறு False

*20. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன.*

The composition of metal coins gives us information on the political condition of the empire.

சரி True

தவறு False

*21. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன.*

The high cost of copper made palm leaf and paper cheaper alternatives for recording royal orders and events in royal courts.

சரி True

தவறு False

*22. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி.1522 இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார்.*

Domingo Paes, a Portuguese traveller, visited the Chola Empire in 1522.

சரி True

தவறு False

LIVEWORKSHEETS

*V. (அ) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக: பொருத்தமான விடையை ( √ ) டிக் இட்டுக் காட்டவும்*

*Match the statement with the reason. Tick ( √ ) the appropriate answer.*

23. **கூற்று:** முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

*Assertion(A) :-* Muhammad Ghori's gold coins carried the figure of Goddess Lakshmi.

*காரணம்:* இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

*Reason (R) :-* The Turkish invader was liberal in his religious outlook.

காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே. R is the correct explanation of A.

காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை. R is not the correct explanation of A.

கூற்று தவறு, காரணம் சரி. A is wrong and R is correct.

கூற்று, காரணம் இரண்டுமே தவறு A and R are wrong.

*(ஆ) தவறான இணையைக் கண்டறியவும்:*

24. 1. மதுரா விஜயம் – கங்காதேவி

Madura Vijayam - Gangadevi

2. அபுல் பாசல் – அயினி அக்பரி

Abul Fazal - Ain-i-Akbari

3. இபன் பதூதா - தாகுயூக்-இ- ஹிந்த்

Ibn Battuta - Tahquiq-i-Hind

4. அமுக்தமால்யதா – கிருஷ்ணதேவராயர்

Amuktamalyatha - Krishnadevaraya

*(இ) பொருந்தாததைக் கண்டுபிடி: c) Find out the odd one*

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | பொறிப்புகள் | பயணக்குறிப்புகள் | நினைவுச் சின்னங்கள் | நாணயங்கள் |
| | Inscriptions | Travelogues | Monuments | Coins |

**By**

**B. Srinivasan & M. Rajaram**
**Graduate Teacher**
**GHS Samathuvapuram Hosur**
**Krishnagiri Dt**

LIVEWORKSHEETS